செ. கு. எண்: 125 நாள்: 26.07.2018

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் அறிக்கை – 26.7.2018

---

மாலை முரசு தொலைக்காட்சி நிருபர் செல்வி சாலினி மற்றும் சிலர் திண்டுக்கல்லில் இருந்து சென்னைக்கு காரில் வந்து கொண்டிருந்தபோது, மதுரை – திண்டுக்கல் ரோட்டில், பொட்டிகுளம் அருகே கார் நிலைதடுமாறி பள்ளத்தில் கவிழ்ந்ததில், காரில் பயணம் செய்த செல்வி சாலினி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்தவுடன், அவருடைய குடும்பத்திற்கு சிறப்பு நிகழ்வாக 16.7.2018 அன்று மூன்று லட்சம் ரூபாய் நிவாரணம் அறிவித்திருந்தேன்.

இந்நிலையில், நிருபர் சாலினி அவர்களுடன் காரில் பயணம் செய்த மாலை முரசு தொலைக்காட்சி ஒளிப்பதிவாளர் திரு.டி.சதீஷ்குமார் என்பவர் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி 24.7.2018 அன்று இரவு உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் வேதனை அடைந்தேன்.

மாலை முரசு தொலைக்காட்சி ஒளிப்பதிவாளர் திரு சதீஷ்குமாரை இழந்து வாடும் அவரது குடும்பத்திற்கும், மாலை முரசு தொலைக்காட்சி நிறுவனத்திற்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த மாலை முரசு தொலைக்காட்சி ஒளிப்பதிவாளர் திரு.சதீஷ்குமார் அவர்களின் குடும்பத்திற்கு சிறப்பு நிகழ்வாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**